## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW-1**

**OS. No. 147/2016**

**பெயர்: திருமதி. பானுமதி**

**தேதி : 06.10.2021**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் பிரதிவாதி என் அப்பா ஆவார். 2 ம் பிரதிவாதி என் அக்கா, 3 ம் பிரதிவாதி என் உடன்பிறந்த சகோதரர். முதல் பிரதிவாதியின் அப்பா பெயர் சின்னச்சாமி கவுண்டர். சின்னச்சாமி கவுண்டர் அவர்களின் அப்பா பெயர் அருணச்சலக்கவுண்டர். அருணச்சலக்கவுண்டர் என்பவருக்கு கெட்டிமுத்து கவுண்டர், சின்னச்சாமி கவுண்டர் என்ற இரண்டு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். 16.06.1955 அருணச்சலக்கவுண்டர், கெட்டிமுத்து கவுண்டர் மற்றும் சின்னச்சாமி கவுண்டரும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரி. சின்னச்சாமி கவுண்டர், கெட்டிமுத்து கவுண்டர் ஆகியோர் அவர்களது பாகத்தை விற்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவாச்சொத்து 1955 ன் பாகத்தின் படி அருணச்சலக்கவுண்டர் பாகத்தினுடையது என்றால் சரிதான். அருணச்சலக்கவுண்டர் இறந்த பின்னிட்டு அவரது மகன்களான சின்னச்சாமி கவுண்டர், கெட்டிமுத்து கவுண்டர் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரி. என் தாத்தா சின்னச்சாமி கவுண்டர் 1990 ஆம் ஆண்டு இறந்து விட்டார். சின்னச்சாமி கவுண்டர்க்கு என் அப்பா, என் சித்தப்பா சண்முகசுந்தரம் இருவரும் தான் வாரிசுகள் என்றால் சரி. சண்முகசுந்தரம் என்பவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். சண்முகசுந்தரம் தாவாச்சொத்தில் 1.78 ஏக்கர் பூமியை நாச்சம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்தச்சொத்தினை என் அப்பா 18.09.1974 ல் கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் 08.03.2007 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் என்பவருக்கு என் அப்பா மட்டுந்தான் வாரிசு ஆவார். மோகனசுந்தரம் என்பவருக்கு என் அப்பா 20.05.1988 ல் தாவாச்சொத்து 280 காலையில் 1 ஏக்கர் பூமி கிரையம் கொடுத்தார் என்றால் சொல்லியுள்ளார்கள் எனக்குத் தெரியாது. 17.09.2012 தேதியில் 3 பிரதிவாதிக்கு என் அப்பா தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

என்னுடைய அத்தை இதே நீதிமன்றத்தில் அ.வ.எண். 146/2005 என்ற வழக்கை தாக்கல் செய்து விசாரணை நடந்து வருகிறது என்பது பற்றி எனக்குத் தெரியாது. தாவாச்சொத்து கோவிந்தசாமி கவுண்டர் என்பவரின் தனிப்பட்டச்சொத்து என்பதாலும் அதில் பாகம் கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்தை என் அப்பா யார் யாருக்கு விற்றுள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. வில்லங்கம் எதுவும் நான் பார்க்கவில்லை. என் அப்பாவிடம் கிரையம் பெற்றவர்களை வழக்கில் சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d– V. Breznev.,
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

Compared with original and uploaded by Typist, ASJ Court, Tiruppur